
தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது
# தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்





| Vol: 02 | Issue: 58 | 4 Pages | 27.9.2024 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 58 | 4 பக்கங்கள் | 27.9.2024 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**புறங்குன்றி கண்டனைய ரேனும் அகங்குன்றி**
**மூக்கிற் கரியா ருடைத்து**

**விளக்கம்:**
புறத்தில் குன்றிமணிப்போல் செம்மையானவராய் காணப்பட்டாராயினும் அகத்தில் குன்றிமணியின் மூக்குப்போல் கருத்திருப்பவர் உலகில் உணடு.

## இத்தாலி பிரதமர் மெலோனியுடன் டேட்டிங்?.. வைரலாகும் புகைப்படங்கள் எலான் மஸ்க் பதில்




எலான் மஸ்க், செப். 27

உலக பணக்காரருக்கும் தொழிலதிபருமான 53 வயதாகும் எலான் மஸ்க்கும் 47 வயதாகும் இத்தாலி பிரதமர் ஜியோர்ஜியோ மெலோனியும் டேட்டிங் செய்வதாக சமூக வலைதளங்களில் அவர்கள் இருவரின் புகைப்படங்கள் பரவி வருகிறது. நியூயார்க்கில் சம்பீத்தில் அட்லாண்டிக் கவுன்சில் குளோபல் சிட்டிசன் விருது வழங்கும் விழா நடந்தது. இதில் பிரதமர் மெலோனிக்கு எலான் மஸ்க் விருது வழங்கி பாராட்டி பேசியுள்ளார்.

வெளிப்புறத்தை விட உள்ளுக்குக்குள் அதிக அழகாக இருக்கும் ஒருவருக்கு, இத்தாலி பிரதமராக தனது பணியை சிறப்பாக செய்து வரும் நான் பார்த்து வியக்கும் மெலோனிக்கு இந்த விருதை வழங்குவதில் மகிழ்ச்சி. மெலோனி உண்மையான நேர்மையான ஒருவர் என்று மஸ்க் அந்த விழாவில் மெலோனியை புகழ்ந்து தள்ளியுள்ளார். அவருக்கு மெலோனியும் தனது எக்ஸ் பக்கத்தில் நன்றி தெரிவித்துள்ளார். பல்வேறு காதல் உறவுகள் கொண்டவராக அறியப்படும் எலான் மஸ்க் மெலோனியுடன் டேட்டிங் செய்கிறாரா என்று அவர் மெலோனியை புகழும் வீடியோவையும் இருவரும் இருக்கும் புகைப்படங்களையும் பகிர்ந்து பலர் கேள்வி எழுப்பி வந்தனர். இந்நிலையில் எலான் மஸ்க் அதை முற்றிலுமாக மறுத்துள்ளார். அந்த நிகழ்ச்சியில் என் தாயாருடன் பங்கேற்றேன். அதிபர் மெலோனியுடன் எந்த காதல் உறவும் இல்லை என்று மஸ்க் விளக்கம் அளித்துள்ளார்.

## மேற்கு நாடுகளால் அச்சுறுத்தல்.. அணு ஆயுதங்களை பயன்படுத்த பரிசீலிக்கும் புதின் பகிரங்க எச்சரிக்கை



ரஷ்யா, செப். 27

2022 ஆம் ஆண்டு தொடங்கிய ரஷிய உக்ரைன் போர் இரண்டு ஆண்டுகளைக் கடந்த நீடித்து வருகிறது. மேற்கு நாடுகள் அங்கம் வகிக்கும்நேட்டோகூட்டமைப்பில் சேர உக்ரைன் முயற்சித்ததால் தங்களுக்கு ஆபத்து என்று கூறி ரஷியா இந்த போரை துவங்கியது. ரஷியா பக்கம் வட கொரியா, சீனா உள்ளிட்ட நாடுகள் இருக்கின்றன. போரில் உக்ரைனுக்கு பக்க பலமாக அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் ஆயுத மற்றும் பொருளாதார ரீதியாக உக்ரைனுக்கு உதவி வருகிறது. உக்ரைனுக்கு பிரிட்டன் ஸ்டார்ம் ஷேடோ என்ற அதிநவீன ஏவுகணைகளை வழங்கியுள்ளது. இதை ரஷியா மீது உக்ரைன் பய்னபடுத்தும் பட்சத்தில் அடுத்தகட்ட நடவடிக்கைக்கு புதின் ஆலோசனை மேற்கொண்டுள்ளார்.

இந்நிலையில்தான் இந்த ஒட்டுமொத்த போரானது எந்நேரமும் மூன்றாம் உலகப் போருக்கு இட்டுச் செல்லும் என்று நிலவி வரும் அச்சத்துக்கு மேலும் வலு சேர்க்கும் வகையில் ரஷிய அதிபர் புதின் முடிவு ஒன்றை வெளியிட்டுள்ளார். இன்று தொலைக்காட்சி வாயிலாக பேசிய புதின், அதிகரித்து வரும் சர்வதேச பாதுகாப்பு அச்சறுத்தல் காரணமாக ரஷியாவின் அணு ஆயுதங்கள் பயன்பாடு [பயன்படுத்தாமல் இருப்பது உள்ளிட்ட கொள்கைகளில்] திருத்தங்களைக் கொண்டுவர வேண்டியுள்ளது.

சர்வதேச ராணுவ மற்றும் அரசியல் சூழல் தொடர்ச்சியாக மாறி வருகிறது, அதற்கு ஏற்ற முடிவுகளை நாம் எடுத்தாக வேண்டும். நமக்கும் நமது நேச நாடுகளுக்கும் உருவாகியுள்ள புதிய அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார். மேலும் ரஷிய ராணுவ தளபதிகளுடனான கூட்டத்துக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

அணு ஆயுதங்களைக் கொண்டுள்ள நாடுகள் உக்ரைனுக்கு உதவி வருவதால் உக்ரைன் ரஷியாவை எதிர்ப்பது என்பது உக்ரைன் வழியாக அதற்கு உதவும் அணு ஆயுத நேரடியாக ரஷியாவை எதிர்ப்பதாகக் கருதப்படும். எனவே தாங்களும் தங்களின் அணு ஆயுதங்களை உபயோகிக்கும் நிர்பந்தம் ஏற்படலாம் என்ற வகையில் புதின் பேசியுள்ளது மேற்கத்திய நாடுகளிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. உலகில் உள்ள மொத்த அணு ஆயுதங்களில், 80 சதவீதம், அமெரிக்கா மற்றும் ரஷ்யாவிடம் உள்ளன. ரஷியாவிடம் மட்டுமே 6,732 அணு ஆயுதங்கள் உள்ளன. இதில், 1,572 அணு ஆயுதங்கள் ஏவுகணைகளில் பொருத்தப்பட்டு முக்கிய இடங்களில் எந்நேரமும் தாக்குதலுக்கு தயார் நிலையில் உள்ளதாகக் கூறப்படுகிறது.

## மொசாட் உளவு அமைப்பின் தலைமையகத்துக்கு குறி.. ஹிஸ்புல்லா ஏவுகணைகளால் இஸ்ரேல் தலைநகரில் பதற்றம்

இஸ்ரேல், செப். 27

லெபனானில் இயங்கி வரும் ஹிஸ்புல்லா கிளர்ச்சியாளர்களின் தளங்களைக் குறிவைத்து இஸ்ரேல் ஏவுகணைத்தாக்குதலைத்தீவிரப்படுத்தியுள்ளது. இதனால் லெபனானில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை நூறைத் தாண்டியுள்ளது. கடந்த வாரம் ஹிஸ்புல்லாவினரின் தொலைத்தொடர்பு சாதனங்கள் வெடித்துச் சிதறியதால் நிலை தடுமாறிய ஹிஸ்புல்லா தற்போது இஸ்ரேல் மீதான தாக்குதலை முன்னெடுத்து வருகிறது.

இஸ்ரேலின் தாக்குதலில் தங்களின் கமாண்டர் இறந்தாலும் அதனால் தங்களின் அமைப்பு ஒட்டுமொத்தமாக அழியும் என்று எண்ணிவிடக்கூடாது என்று ஹிஸ்புல்லா தலைவர் ஹசன் நசரல்லா தெரிவித்துள்ளார். இந்நிலையில் தங்கள் மீதான தாக்குதலுக்கு எதிர் தாக்குதல் நடதத் தொடங்கியுள்ள ஹிஸ்புல்லா இதுவரை வடக்கு இஸ்ரேல் உள்ளிட்ட எல்லைப் பகுதிகளிலேயே தாக்குதல் நடத்தியிருந்த நிலையில் தற்போது இஸ்ரேலின் மையப்பகுதியில் அமைந்திருக்கும் அந்நாட்டின் தலைநகர் டெல் அவிவ் மீது பேலிஸ்டிக் ஏவுகணை தாக்குதல் நடத்தியுள்ளது.

இந்த பேலிஸ்ட்டிக் தாக்குதலை ஆன்டி பேலிஸ்டிக் மிசைல்கள் மூலம் இடைமறித்து அழித்ததாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது. டெல் அவிவ் நகரின் உள்ள இஸ்ரேலின் உளவு அமைப்பான மொசாட்டின் தலைமையகத்துக்குக் குறிவைத்துத் தாக்கியதாக ஹிஸ்புல்லா தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த வாரம் நடந்த பேஜர் தாக்குதல்களுக்கும் தங்களது தளபதிகளைக் குறிவைத்துக் கொன்றதற்கும் மோசாட்டை [பழிதீர்க்க இந்த தாக்குதலை நடாத்தியுள்ளதாக ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளது. இந்த தாக்குதலால் தலைநகர் டெல் அவிவில் பதற்றமான சூழல் நிலவுகிறது.

# சாலை விபத்தில் 6 பேர் பலி நிவாரணம் அறிவித்தார் முதல்வர்

சென்னை, செப். 27

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

திருச்செந்தூருக்கு சுற்றுலா சென்றுவிட்டு திரும்பும் வழியில் கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், மேட்டத்தூர் கிராமம், திருச்சி சென்னை தேசிய நெடுஞ்சாலையில் J.S.நகர் அருகில் அதிகாலை சுமார் 3.30 மணியளவில் TN73 M 8384 என்ற பதிவெண் கொண்ட வேன் ஒன்று எதிர்பாராத விதமாக சாலையோர மரத்தில் மோதிய விபத்தில் இராணிப்பேட்டை மாவட்டம், மாம்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த ரவி, செல்வம், ராமலிங்கம், முருகன், துரை மற்றும் சக்தி ஆகிய 6 நபர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகவும் வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.




மேலும், இவ்விபத்தில் காயமடைந்து விழுப்புரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு சிறப்புச் சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாயும், காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஐம்பதாயிரம்ரூபாயும்முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# பட்டுபருத்தி நெசவாளர்களுக்கான விருது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்

சென்னை, செப். 27

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இன்றுதலைமைச் செயலகத்தில், 202324ம் ஆண்டிற்கான பட்டு மற்றும் பருத்தி ரகங்களில் சிறந்த கைத்தறி நெசவாளர் விருதுக்கு தேர்வு செய்யப்பட்ட 6 விருதாளர்களுக்கு பரிசுத்தொகையாக 20 லட்சம் ரூபாய்க்கான காசோலைகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களையும், சிறந்த வடிவமைப்பாளர் விருதுக்கு தேர்வு செய்யப்பட்ட 3 வடிவமைப்பாளர்களுக்கு பரிசுத்தொகையாக 40 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களையும், போட்டி தேர்வு மூலம் சிறந்த இளம் வடிவமைப்பாளர் விருதுக்கு தேர்வு செய்யப்பட்ட 3 வடிவமைப்பாளர்களுக்கு பரிசுத் தொகையாக 2.25 லட்சம் ரூபாய்க்கான காசோலைகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களையும் வழங்கி சிறப்பித்தார்.




இதில் மாநில அளவில் பட்டு ரகத்தில் சிறந்த நெசவாளர் விருதுக்கான முதல் பரிசினை காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் உறுப்பினர்சந்திரசேகரனுக்கும், இரண்டாம் பரிசினை ஆரணி பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் உறுப்பினர் குமரேசனுக்கும், மூன்றாம் பரிசினை காஞ்சிபுரம் அறிஞர் அண்ணாபட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் உறுப்பினர் புகழேந்திக்கும் வழங்கினார்.

பருத்தி ரகத்தில் சிறந்த நெசவாளர் விருதுக்கான முதல் பரிசினை பரமக்குடி, அன்னை சாரதா மகளிர் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் உறுப்பினர் பிரேமாவுக்கும், இரண்டாம் பரிசினை பரமக்குடி, லோக மான்ய திலகர் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் உறுப்பினர் டி.எஸ். அலமேலுவுக்கும், மூன்றாம் பரிசினை கோயம்புத்தூர், வதம்பச்சேரி ஸ்ரீ நடராஜர் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் உறுப்பினர் மகாலெட்சுமிக்கும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

## தரங்கம்பாடி வட்டம் காத்தான்சாவடி பகுதியில் கல்லூரி மாணவர்கள், மகளிர் சுய உதவிக் குழுவினர், சமூக ஆர்வலர்கள் மூலம் பனை விதைகள் சேகரிப்பு முகாம்: மாவட்ட ஆட்சியர் ஏ.பி.மகாபாரதி தொடங்கி வைத்தார்

மயிலாடுதுறை, செப். 27

தரங்கம்பாடி வட்டம் காத்தான் சாவடி பகுதியில் கல்லூரி மாணவர்கள், மகளிர் சுய உதவிக் குழுவினர், சமூக ஆர்வலர்கள் மூலம் பனை விதைகள் சேகரிப்பு முகாமினை மாவட்ட ஆட்சியர் ஏ.பி. மகாபாரதி தொடங்கி வைத்தார்.

மயிலாடுதுறை மாவட்டத்தில் ஒரு கோடி பனை விதைகள் நடும் நெடும் பணிகளின் முன்னெடுப்பாக மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி வட்டம் காத்தான்சாவடி பகுதியில் கல்லூரி மாணவர்கள், மகளிர் சுய உதவிக் குழுவினர், சமூக ஆர்வலர்கள் மூலம் பனை விதைகள் சேகரிப்பு முகாமினை மாவட்ட ஆட்சியர் ஏ.பி. மகாபாரதி தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியர் மகாபாரதி கலந்துகொண்டு தெரிவித்தபோது, நுங்குவிற்கு இணையாக ஏதும் இல்லை. பனை கிழங்கும் நாம் உண்ணலாம். இது ஒரு உன்னதமான பொருள். உடலுக்கு குளிர்ச்சியை தரக்கூடியது. இயற்கையானது, இனிப்பானது. அதுபோல் பனை ஓலையும் பயன் தரக்கூடியதாக உள்ளது. பனை மரம்; வீடு கட்டுவதற்கு உபயோகமாக இருக்கிறது. பெரிய அலை வந்தாலும் தடுக்கும் அளவிற்கு இருக்கும். கடந்த ஆண்டு அரசின் நடவடிக்கையால் 65 இலட்சம் பனை மரங்கள் நட்டு உள்ளனர்.

இது 25 வருடங்களுக்கு பிறகு நமக்கு பிறகு வரும் சந்ததியர்களுக்கு உபயோகமாக இருக்கும். காலநிலை மாற்றங்களுக்கு ஏற்றாற்போல் நாம் பல மரங்களை நட்டு வைக்க வேண்டும். ஏற்கனவே 1 இலட்சம் பனை விதைகளை சேகரித்துள்ளனர். நமது மாவட்டத்தில் குறைந்தபட்சம் நாம் 5 இலட்சம் மரங்களையாவது நட வேண்டும். இதன் முன்னெடுப்பாக தற்போது பனை விதைகள் சேகரிப்பு பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. இப்பணிகளில் நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள், மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள், தன்னார்வலர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என ஆட்சியர் மகாபாரதி தெரிவித்தார்

தொடர்ந்து, மீண்டும் மஞ்சப்பை திட்டம் கீழ் பொதுமக்களுக்கு மஞ்சப்பைகளை மாவட்ட ஆட்சியர் வழங்கினார் இப்பனைவிதை சேகரிப்பு பணிகளில் தரங்கம் பாடி பொறையார் கல்லூரி நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள் ஈடுபட்டனர்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வன அலுவலர் அபிசேக் தோமர் தரங்கம் பாடி பேரூராட்சி தலைவர் சுகுண சங்கரி குமரவேல் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் தமிழ்ஒளி, தரங்கம் பாடி பேரூராட்சி செயல் அலுவலர் கமலக்கண்ணன் மற்றும் அரசு அலுவலர்கள், கல்லூரி பேராசிரியர்கள், மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.







விழுப்புரம் மாவட்டம் அனந்தபுரம் ரோட்டரி சமுதாய குழுமம் சார்பாக பிளாஸ்டிக் ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி அனந்தபுரம் தமிழரசி பாராமெடிக்கல் சயின்ஸ் கல்லூரியில் நடைபெற்றது. அனந்தபுரம் ரோட்டரி சமுதாய குழுமம் முன்னாள் தலைவர் விக்கிரவாண்டி தாலுகா நுகர்வோர் கண்காணிப்பு குழு உறுப்பினர் ஜேசு ஜூலியஸ் ராஜா தலைமை தாங்கினார். சிறப்புரை ஆற்றினார் அதில் அன்றாட வாழ்வில் பிளாஸ்டிக் பயன்படுத்தினால் வரும் தீமைகள் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தி அதற்கு பதிலாக துணிப்பைகள் பயன்படுத்தப்பட வேண்டும் என்று மாணவிகளுக்கு மஞ்சள்பை வழங்கினார். இந்த நிகழ்ச்சிக்கு ஆசிரியை அரிச்செல்வி மற்றும் கல்லூரி மாணவிகள் பலர் கலந்து கொண்டனர்.

# 80 ஆயிரம் பேருக்கு புதிய ரேஷன் அட்டைகள் வினியோகம்

சென்னை, செப். 27

புதிய ரேஷன் அட்டைகளுக்காக விண்ணப்பிக்கப்பட்ட 2 லட்சத்து 89 ஆயிரத்து 591 விண்ணப்பங்களில் இதுவரை 80 ஆயிரத்து 50 பேருக்கு புதிய ரேஷன் அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.




முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தை அறிவித்தவுடன், ஒரே குடும்பத்தில் வசித்து வந்தவர்கள் பலரும் தனி ரேஷன் அட்டைக்கு விண்ணப்பிக்க தொடங்கினர். இதனால், புதிய ரேஷன் அட்டைகளுக்கு விண்ணப்பிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்தது.

இதனால், 2023 ஜூலை 6ந் தேதி முதல் புதிய ரேஷன் அட்டைகள் வழங்கும் பணி தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டன. அதைத்தொடர்ந்து, மிக்ஜம் புயலால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் 17 ஆயிரத்து 197 ரேஷன் அட்டைகளும், கனமழையால் பாதிக்கப்பட்ட நெல்லை, தென்காசி, தூத்துக்குடி மற்றும்கன்னியாகுமரிமாவட்டங்களில் 10 ஆயிரத்து 380 ரேஷன் அட்டைகளும் 2023ம் ஆண்டு டிசம்பர் மாதம் வழங்கப்பட்டன.

மேலும், 2024ம் ஆண்டு மார்ச் மாதம் 45 ஆயிரத்து 509 ரேஷன் அட்டைகள் அச்சடித்து வழங்கப்பட்டன.

அதைத்தொடர்ந்து நாடாளுமன்ற தேர்தல்காரணமாக மீண்டும் புதிய ரேஷன் அட்டைகள் வழங்கும் பணி நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. பின்னர், நாடாளுமன்ற தேர்தல் நடைமுறைகள் முடிந்த பிறகு மீண்டும் புதிய ரேஷன் அட்டைகளுக்கு விண்ணப்பித்தவர்களின் விவரங்களை சரிபார்க்கும் கள விசாரணை மற்றும் விண்ணப்பங்கள் சரிபார்க்கும் பணிகள் முடுக்கிவிடப்பட்டன.

அதைத்தொடர்ந்து புதிய ரேஷன் அட்டைகள் வழங்கும் பணியும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

அதன்படி, புதிய ரேஷன் அட்டைகளுக்காக பெறப்பட்ட 2 லட்சத்து 89 ஆயிரத்து 591 விண்ணப்பங்களில் 1 லட்சத்து 22 ஆயிரம் விண்ணப்பங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, அதில் 80 ஆயிரத்து 50 ரேஷன் அட்டைகள் அச்சடித்து வினியோகிக்கப்பட்டு உள்ளன.

இதுவரை சரிபார்க்கப்பட்ட விண்ணப்பங்களில் 99 ஆயிரத்து 300 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு உள்ளன.

மேலும் 68 ஆயிரத்து 291 விண்ணப்பங்களை சரிபார்க்கும் மற்றும் கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விரைவில் புதிய ரேஷன் அட்டைக்கு விண்ணப்பித்தவர்கள் அனைவருக்கும் ரேஷன் அட்டைகள் வழங்கப்படும் என்று உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

# காலாண்டு விடுமுறையை யொட்டி தமிழகம் முழுவதும் 1,120 சிறப்பு பஸ்கள் இயக்கம்



சென்னை, செப். 27

தமிழ்நாடு அரசு விரைவு போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குனர் மோகன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

பள்ளிகள் காலாண்டு விடுமுறை மற்றும் வார விடுமுறைகளை முன்னிட்டு, சென்னை கிளாம்பாக்கத்தில் இருந்து திருவண்ணாமலை, திருச்சி, கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், கன்னியாகுமரி, தூத்துக்குடி, கோயம்புத்தூர், சேலம், ஈரோடு, திருப்பூர் ஆகிய இடங்களுக்கு 27ந் தேதி (வெள்ளிக்கிழமை) 395 பஸ்களும், 28ந் தேதி (சனிக்கிழமை) 345 பஸ்களும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னை கோயம்பேட்டில் இருந்து திருவண்ணாமலை, நாகை, வேளாங்கண்ணி, ஓசூர். பெங்களூரு ஆகிய இடங்களுக்கு 27ந் தேதி (வெள்ளிக்கிழமை) 70 பஸ்களும், 28ந் தேதி (சனிக்கிழமை) 70 பஸ்களும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், பெங்களூர், திருப்பூர், ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலிருந்து பல்வேறு இடங்களுக்கும் 200 சிறப்பு பஸ்களும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. விழுப்புரம், சிதம்பரம், திருவண்ணாமலை ஆகிய இடங்களுக்கு மாதவரத்தில் இருந்து 27ந் தேதி 20 பஸ்களும் 28ந் தேதி 20 பஸ்களும் இயக்கப்படுகிறது.

மேலும், ஞாயிற்றுக்கிழமை சொந்த ஊர்களில் இருந்து சென்னை மற்றும் பெங்களூரு திரும்ப வசதியாக பயணிகளின் தேவைகேற்ப அனைத்து இடங்களில் இருந்தும் சிறப்பு பஸ்கள் இயக்கிட திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# டவுன் பஸ்சுக்குள் பயணிகளுடன் பயணம் செய்த தெரு நாய்



வேலூர், செப். 27

வேலூர்மாவட்டம் காட்பாடி குடியாத்தம் இடையே இயங்கிவரும், அரசு டவுன்பஸ் மிகவும் பழுதான நிலையில் ஓடிக்கொண்டு இருந்தது. இதை புதியதாக மாற்ற வேண்டும் என்கிற கோரிக்கை தொடர்ந்த நிலையில் தானியங்கி கதவுகளுடன் கூடிய புதிய டவுன்பஸ் அண்மையில் விடப்பட்டது.

இந்த பஸ் கே.வி.குப்பம் வழியாக சென்னறாயனபள்ளி பஸ் நிறுத்தத்தில் நின்று சில பயணிகளை இறக்கிவிட்டது. அப்போது குடியாத்தம் செல்ல ஒரு பயணி ஏறினார். அப்போது முன்னதாக ஒரு தெரு நாய் திடீர் என்று பஸ்சின் பின்பக்க வாசல் வழியாக உள்ளே ஏறிக்கொண்டது. அழையா விருந்தாளியான அந்த நாய் ஏறியதும் பஸ்சின் தானியங்கி கதவுகள் மூடி பஸ் புறப்பட்டது.

சிறிது தூரம் சென்றதும் பஸ்சுக்குள் நாய் சத்தம் கேட்டது. இதனால் நாய் கடித்துவிடுமோ என்று பயணிகள் அலறினர். இருக்கையை விட்டு இங்கும் அங்குமாக ஓடினர். எனினும் பின்பக்கம் ஏறிய நாய் இருக்கைகளுக்கு இடையே நகர்ந்து நகர்ந்து டிரைவரிடம் வந்து, என்ஜின்மீது ஏறி படுத்துக் கொண்டது. அதை அங்கிருந்து விரட்டியதும் டிரைவர் சீட்டின் பின்பக்கம் உள்ள பயணிகள் இருக்கைக்கு அடியில் பதுங்கியது.

தொடர்ந்து நாயை அடித்து விரட்டி சிறிது தூரத்தில் பஸ்சை நிறுத்தி இறக்கிவிட்டனர். உடனே தானியங்கி கதவை மூடிய படி பஸ், குடியாத்தம் நோக்கி புறப்பட்டு சென்றது. நாய் இல்லை என்பதை உறுதி செய்து கொண்ட பயணிகள் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர்.

இவ்வளவு நடந்தும் நாய் ஒருமுறைகூட குரைக்கவில்லை என்பது ஆச்சரியமாக இருந்தது.

# திருச்செந்தூர் கோவிலில் விரைவு தரிசன முறை வாபஸ்



தூத்துக்குடி, செப். 27

பிரசித்தி பெற்ற திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் கந்த சஷ்டி திருவிழா நவம்பர் மாதம் 2ந்தேதி தொடங்கி 8 நாட்கள் நடைபெறுகிறது. இந்த திருவிழாவில் கலந்து கொண்டு முருகப் பெருமானை தரிசிக்க பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கூடுவார்கள்.

இந்த நிலையில், திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் விரைவு தரிசனத்திற்கு ஆயிரம் ரூபாய் கட்டணம் நிர்ணயிக்கப்படுவதாக இன்று காலை அறிவிப்பு வெளியானது.

கந்தசஷ்டிதிருவிழாவின் போது ஆயிரம் ரூபாய் செலுத்தி விரைவு தரிசனத்தில் சென்று முருகப்பெருமானை தரிசிக்கலாம் என்று கூறப்பட்டது. இதற்கு பக்தர்கள் ஆட்சேபனை தெரிவித்தனர். இதனை தொடர்ந்து 1000 ரூபாய் விரைவு தரிசன முறை ரத்து செய்யப்படுவதாக கோவில் நிர்வாகம் தற்போது தெரிவித்துள்ளது. மேலும் பொது தரிசனமும், ரூ.100 சிறப்பு தரிசனம் மட்டுமே அமலில் இருக்கும் எனவும் தெரிவித்துள்ளது.

# பெண் குழந்தையை ரூ.1 லட்சத்துக்கு விற்க முயன்ற தந்தை கைது

எடப்பாடி, செப். 27

சேலம் மாவட்டம் எடப்பாடி ஒன்றியத்திற்குட்பட்ட சித்தூர் கிராமம், திம்பத்தியான் வளவு பகுதியைச் சேர்ந்தவர் சேட்டு (32). கரும்பு வெட்டும் கூலி தொழிலாளி. இவரது மனைவி குண்டு மல்லி இவர்களுக்கு கடந்த 7 ஆண்டுகளுக்கு முன் திருமணம் நடைபெற்றது. இதுவரை இவர்கள் 6 குழந்தைகளை பெற்றெடுத்துள்ளனர்.

சேட்டுகுண்டுமல்லிதம்பதிக்கு அண்மையில் 6வதாக பெண் குழந்தை பிறந்துள்ளது. அந்த பெண் குழந்தையை சேட்டு புரோக்கர்கள் மூலம் நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம் பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கு ரூ.1 லட்சத்திற்கு விற்பனை செய்ய முயற்சி செய்து உள்ளார். ஆனால் அவர் இந்த குழந்தையை சட்டபூர்வமாகவே தான் தத்தெடுக்க முடிவு செய்துள்ளதாக கூறி, சேலத்தில் உள்ள குழந்தைகள் நல ஆணையத்தை தொடர்பு கொண்டு தகவல் கூறி உள்ளார்.

இது குறித்து சம்பந்தப்பட்ட அலுவலர்கள் சேட்டுவை பிடித்து விசாரணை மேற்கொண்ட போது, ஏற்கனவே தனக்கு பிறந்த 2 ஆண் குழந்தை மற்றும் ஒரு பெண் குழந்தையை தலா ரூ. 1 லட்சத்துக்கு புரோக்கர்கள் மூலம், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளை சேர்ந்தவர்களுக்கு விற்பனை செய்ததும், தற்போது பிறந்த பெண் குழந்தையை குமாரபாளையம் பகுதியைச் சேர்ந்தவருக்கு 1 லட்சம் ரூபாய்க்கு விற்பனை செய்ய முயற்சித்த போது போலீசாரிடம் சிக்கியதும் தெரியவந்தது.

இதனை அடுத்து சேட்டுவை கைது செய்த போலீசார் தொடர்ந்து அவர்கள் குழந்தைகளை விற்பனை செய்த விவரம் குறித்தும், அதற்குதுணையாகசெயல்பட்ட புரோக்கர்கள் குறித்தும் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# ஆசிரியர் தகுதி தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் காதில் பூ வைத்து நூதன ஆர்ப்பாட்டம்



ஈரோடு, செப். 27

ஆசிரியர் தகுதி தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் காதில் பூ வைத்து நூதன ஆர்ப்பாட்டம்ஈரோடு:

பள்ளி கல்வித்துறையில் ஆசிரியர்கள்தகுதித்தேர்வு அடிப்படையில் தேர்வு செய்யப்படுகிறார்கள். இதையடுத்து கடந்த 2013ம் ஆண்டு ஆசிரியர் தகுதித்தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு இதுவரை ஆசிரியர் பணியிடங்கள் ஒதுக்கப்படவில்லை.

இதற்கிடையே ஆசிரியர்தகுதித்தேர்வில்தேர்ச்சி பெற்றவர்களுக்கு நியமனத்தேர்வு நடத்தப்படும் என அரசு அறிவித்தது. இந்த முறையை கைவிட வலியுறுத்தி ஆசிரியர் தகுதித்தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள்கடந்த 11 வருடங்களாக போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் ஆசிரியர் தகுதித்தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கான நியமனத்தேர்வு அரசாணை 149ஐ ரத்து செய்து தி.மு.க தேர்தல் வாக்குறுதியில் அளித்த 177ஐ நடைமுறைப்படுத்தக்கோரி தமிழகத்தில் மண்டல வாரியாக ஆசிரியர் தகுதித்தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் அமைப்பின்சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்று வருகிறது.

அதன் ஒரு பகுதியாக ஈரோட்டில் காளைமாட்டு சிலை அருகில் ஈரோடு, கோவை, திருப்பூர், சேலம், தருமபுரி உள்ளிட்ட மாவட்டங்களை சேர்ந்த 300க்கும் மேற்பட்டோர் காதுகளில் பூ வைத்து நூதன முறையில் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யா மொழி ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் வாழ்வாதாரத்தை காக்க நியமனத்தேர்வு முறை ரத்து செய்ய வேண்டும். தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் தேர்தல் வாக்குறுதியில் ஆசிரியர் தகுதித்தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்காக அறிவித்த அரசாணை 177ஐ நிறைவேற்ற வேண்டும் என கோஷங்கள் எழுப்பினர்.

# ரவுடிகள் சம்பவ செந்தில் பாம் சரவணனை பிடிக்க போலீஸ் அதிரடி வேட்டை



சென்னை, செப். 27

பகுஜன் சமாஜ் கட்சி தலைவராக இருந்த ஆம்ஸ்ட்ராங் படுகொலை சம்பவத்துக்கு பிறகு சென்னையில் ரவுடிகள் வேட்டை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

ஆம்ஸ்ட்ராங் கொலையில் கைதான ரவுடி திருவேங்கடம் கடந்த ஜூலை மாதம் 15ந்தேதி போலீஸ் என்கவுண்டரில் சுட்டுக்கொல்லப்பட்டான்.

இதைத் தொடர்ந்து கடந்த 18ந்தேதி ரவுடி காக்காத்தோப்பு பாலாஜியும், நேற்று முன்தினம் சீசிங் ராஜாவும் சுட்டுக் கொல்லப்பட்டனர். இவர்களை தவிர 300க்கும் மேற்பட்ட ரவுடிகள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

தலைமறைவாக இருந்த முக்கிய ரவுடிகளில் சீசிங் ராஜா, காக்கத்தோப்பு பாலாஜி இருவரும் என்கவுண்டர் செய்யப்பட்டு விட்ட நிலையில் ரவுடி சி.டி.மணிக்கு காலில் முறிவு ஏற்பட்டுள்ளது. போலீஸ் பிடியில் இருந்து தப்பி ஓடும் போது சி.டி.மணி தவறி விழுந்து விட்டதாக போலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில்தான் தலைமறைவாக உள்ள ரவுடிகள் சம்பவ செந்தில், பாம் சரவணன் இருவரையும் பிடிப்பதற்கு போலீசார் தேடுதல் வேட்டையை தீவிரப்படுத்தி உள்ளனர்.

சம்பவ செந்தில் தாய்லாந்தில் பதுங்கி இருப்பதாக கூறப்படும் நிலையில், பாம் சரவணன் ஆந்திராவுக்கு தப்பி ஓடிவிட்டதாக கூறப்படுகிறது. இவர்கள் இருக்கும் இடத்தை கண்டுபிடிப்பதற்காக அவர்களது நண்பர்கள் மற்றும் உறவினர்களை போலீசார் ரகசியமாக கண்காணித்து வருகிறார்கள்.

2 ரவுடிகளுக்கும் மிகவும் நெருக்கமான நபர்கள் யார்யார்? என்பதை அடையாளம் கண்டுள்ள போலீசார் அவர்களின் செல்போன் எண்களை வைத்தும் துப்புதுலக்கி வருகிறார்கள்.

இதற்காக சென்னை மத்திய குற்றப்பிரிவில் உள்ள ரவுடி ஒழிப்பு பிரிவு போலீசாருடன் மற்ற பிரிவுகளை சேர்ந்த போலீசாரும் கைகோர்த்து செயல்பட்டு வருகிறார்கள்.

இதனால் சம்பவ செந்தில், பாம் சரவணன் இருவரும் விரைவில் சிக்குவார்கள் என்று போலீசார் தெரிவித்துள்ளனர்.

# விழுப்புரம் நகராட்சி அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்பு போலீசார் சோதனை

விழுப்புரம், செப். 27

விழுப்புரம் சென்னை சாலையில் நகராட்சி அலுவலகம் செயல்பட்டு வருகிறது. இங்குள்ள ஊழியர்கள், லஞ்சம் வாங்குவதாக லஞ்ச ஒழிப்பு போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

இதனை தொடர்ந்து லஞ்ச ஒழிப்பு போலீஸ் இன்ஸ்பெக்டர் ஈஸ்வரி தலைமையில் போலீசார் இன்று காலை 11.50 மணிக்கு ஜீப்பில் அங்கு சென்றனர்.

அவர்கள் நகராட்சி அலுவலகத்தில் திடீர் சோதனையில் ஈடுப்பட்டனர். நகராட்சி அலுவலத்தில் உள்ள பல்வேறு துறைகளில் இந்த சோதனை நடத்தப்பட்டது. அப்போது ஊழியர்கள் யாரையும் வெளியே செல்ல அனுமதிக்கவில்லை. தொடர்ந்து சோதனை நடைபெற்று வருகிறது. சோதனை முடிவில் தான் பணம் மற்றும் ஆவணங்கள் கைப்பற்றப்பட்டதா என்பது தெரியவரும்.

# கோவை வாலிபரிடம் ரூ.48 லட்சம் மோசடி - திருப்பூர் தொழில் அதிபர் மீது வழக்கு

கோவை, செப். 27

கோவை வேடப்பட்டி அருகே உள்ள ஹரி ஸ்ரீ கார்டனை சேர்ந்தவர் பிரவீன் குமார் (வயது28).

இவர் வாட்டர் டேங்க் சுத்தம் செய்யும் பணி செய்து வருகிறார். கடந்த 2020ம் ஆண்டு இவருக்கு திருப்பூரை சேர்ந்த மார்சல் பிரிட்டோ என்பவர் அறிமுகம் ஆனார். அவர் தான் தொழில் அதிபராக இருப்பதாகவும், துபாயில் பிபிஓ அலுவலகம் நடத்தி வருவதாக தெரிவித்துள்ளார்.

மேலும் துபாயில் பிபிஓ அலுவலகம் திறந்தால் நன்றாக பணம் சம்பாதிக்கலாம். எனவே நீங்கள் பணம் முதலீடு செய்தால் நாம் இருவரும் சேர்ந்து துபாயில் தொடங்கலாம். அதில் வரும் லாபத்தில் உங்களுக்கும் பங்கு தந்து விடுகிறேன் என ஆசை வார்த்தை கூறியுள்ளார்.

இதனை பிரவீன்குமார் உண்மை என நம்பிவிட்டார்.பின்னர்பிரவீன்குமார் அவரிடம் ரூ.48 லட்சம் பணத்தை கொடுத்தார். அதனை தொடர்ந்து பிரவீன்குமாரை துபாய்க்கு அழைத்து சென்றுள்ளார்.

அப்போது தொழில் தொடங்கவில்லை. இதுகுறித்து மார்சல் பிரிட்டோவிடம் கேட்டதற்கு அவர், கொரோனா என்பதால் தொடங்கவில்லை என தெரிவித்து விட்டார். இதையடுத்து பிரவீன்குமார் அங்கிருந்து கோவைக்கு வந்தார். அதன்பிறகும் தொழில் தொடங்கவில்லை. இதனால் பிரவீன்குமாருக்கு மார்சல் பிரிட்டோ மீது சந்தேகம் ஏற்பட்டது.

தான்கொடுத்தபணத்தை திருப்பி தருமாறு பிரவீன்குமார் கேட்டார். அதனையும் அவர் திருப்பி கொடுக்காமல் இழுத்தடித்து வந்தார்.

இதனால் தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த பிரவீன்குமார் சம்பவம் குறித்து கோவை ஆர். எஸ்.புரம் போலீசில் புகார் அளித்தார்.

புகாரின் பேரில் இன்ஸ்பெக்டர் காசிபாண்டியன், தொழில் தொடங்குவதாக கூறி ரூ.48 லட்சம் மோசடியில் ஈடுபட்ட திருப்பூர் தொழில் அதிபர் மார்சல் பிரிட்டோ மீது மோசடி வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்.

# உரிய ஆவணங்கள் இல்லாமல் திருப்பூரில் சுற்றித்திரிந்த வங்கதேச நாட்டினர் 6 பேர் கைது

திருப்பூர், செப். 27

வங்கதேச நாட்டை சேர்ந்தவர்கள் எந்தவித ஆவணங்களும் இல்லாமல் இந்தியாவுக்குள் நுழைந்து திருப்பூர் பின்னலாடை நிறுவனங்களில் தங்கி பணியாற்றுவது அதிகரித்து வருகிறது. அவ்வாறு பதுங்கி இருப்பவர்களை போலீசார் அடையாளம் கண்டு கைது செய்து வருகின்றனர்.

இந்தநிலையில் திருப்பூர் தெற்கு போலீசார் மற்றும் அதிவிரைவுப்படையினர்திருப்பூர்மத்திய பஸ் நிலைய பகுதியில் சுற்றித்திரிந்த வெளிமாநில தொழிலாளர்களிடம் ஆதார் உள்ளிட்ட ஆவணங்களை பரிசோதனை செய்யும் பணியில் ஈடுபட்டனர். அப்போது அங்கு சந்தேகத்துக்கு இடமாக வந்த 6 பேரிடம் விசாரணை நடத்தினர். அவர்களிடம் ஆதார் உள்ளிட்ட ஆவணங்கள் எதுவும் இல்லை. விசாரணையில் அவர்கள் வங்கதேச நாட்டை சேர்ந்தவர்கள் என்பது தெரியவந்தது.

கடந்த 15 நாட்களுக்கு முன்பு இவர்கள் முதலிபாளையம் சிட்கோ பகுதியில் உள்ள ஒரு பனியன் நிறுவனத்துக்கு வடமாநில தொழிலாளர்கள் போல் வேலைக்கு வந்துள்ளனர். அந்த நிறுவனத்தில் வேலை செய்தபோது, பனியன் நிறுவன தரப்பில் இருந்து அவர்களின் அடையாள ஆவணங்களை சரிபார்த்தபோது வங்கதேசத்தினர் என்பது தெரியவந்துள்ளது. இதனால் அவர்களை வேலைக்கு அமர்த்தாமல் அங்கிருந்து அனுப்பி விட்டனர்.

இதைத்தொடர்ந்து 6 பேரும் பல்லடத்தில் உள்ள தனியார் நிறுவனத்தில் பணியில் சேருவதற்காக மத்திய பஸ் நிலையத்துக்கு வந்த போது போலீசாரிடம் சிக்கினர். உரிய ஆவணங்கள் எதுவும் இல்லாமல் கவுகாத்தியில் இருந்து சென்னை வந்து அங்கிருந்து திருப்பூர் வந்தது தெரியவந்தது. அவர்கள் வங்கதேச நாட்டின் நாராயண்கஞ்ச் பகுதியை சேர்ந்த தன்வீர் (வயது 39), ரசிப் தவுன் (43), முகமது அஸ்லம் (41), முகமது அல் இஸ்லாம் (37), முகமது ராகுல் அமின்(30), சவுமுன்ஷேக் (38) என்பது தெரியவந்தது. 6 பேரையும் தெற்கு போலீசார் கைது செய்தனர். பின்னர் அவர்களை சென்னை அழைத்து சென்று புழல் சிறையில் அடைத்தனர்.

# பாராளுமன்ற தேர்தலில் தி.மு.க. வெற்றிக்கு பிரதமர் மோடிதான் காரணம்உதயநிதி ஸ்டாலின்



சென்னை, செப். 27

சென்னை ராஜா அண்ணாமலை மன்றத்தில் சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் நடைபெற்ற தி.மு.க. பவளவிழாவில் 75 வயது நிரம்பிய கழக முன்னோடிகளுக்கு பொற்கிழி சான்றிதழ் மற்றும் நினைவு பரிசுகளை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்.

தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும், கிட்டத் தட்ட ரூ.50 கோடிக்கு மேல் கழகத்திற்காக உழைத்த மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கப்பட்டு உள்ளது என்றால் உலகத்திலேயே ஒரே ஒரு இயக்கம் எது என்றால் அது திராவிட முன்னேற்ற கழகம் தான்.

கலைஞரின் நூற்றாண்டை சென்ற ஆண்டு சிறப்பாக கொண்டாடி முடித்தோம். கலைஞரின் நூற்றாண்டில் பெருமையாக சொல்கிறோம். 5 முறை கலைஞர் தமிழகத்தை ஆண்டவர். அதற்கு காரணம் கழகத்திற்காக உழைத்த மூத்த முன்னோடிகள்தான்.

நீங்கள் இல்லாமல் கலைஞர்கிடையாது. நீங்கள் இல்லாமல் அந்த வெற்றி கிடையாது. உங்களின் உழைப்பு உங்களின் ரத்தம் தான் ஒவ்வொரு வெற்றியையும் கழகத்திற்கு தேடி தந்திருக்கிறது.

கடந்த பாராளுமன்ற தேர்தல் வெற்றிக்கும் நீங்கள்தான் காரணம். இந்த வெற்றிக்கான காரணங்கள் மூன்று சொல்வேன். முதல் காரணம் என்ன வென்றால், பிரதமர் நரேந்திர மோடி. அவர்தான் நமக்கு இந்த வெற்றியை தேடி கொடுத்தார்.

நான் தமிழ்நாடு முழுக்க சுற்றுப்பயணம் போனேன். கிட்டத்தட்ட 23 நாட்கள் பயணம் செய்து அனைத்து தொகுதிகளிலும் பிரசாரம் செய்து அனைத்து தரப்பு மக்களையும் சந்தித்தேன்.

அப்போது அவர்களிடம் பா.ஜ.க.வின் மீதான வெறுப்பு இருப்பதை தெரிந்து கொண்டேன். அதை தொடர்ந்து தக்க வைத்துக் கொண்டிருந்தவர் பிரதமர் மோடிதான்.

சென்னையில் தமிழ்நாட்டில் வெள்ளம், மழை, புயல் வந்த போது ஒரு முறை கூட வந்து எட்டிப் பார்க்காத மோடி தேர்தல் அறிவித்தவுடன் 8 முறை தமிழகம் வந்தார். மாதத்திற்கு 4 முறை வந்து விட்டு போனார்.

இன்னும் சொல்லப் போனால் தமிழ்நாட்டில் பிரசாரமே முடிந்து விட்டது. அப்போதும் அவர் இங்கு வந்து கன்னியாகுமரியில் விவேகானந்தர் மடத்தில் சென்று தியானம் செய்தார். அவரின் பருப்பு வடநாட்டில் வெந்திருக்கலாம். தமிழ்நாட்டில் என்றைக்குமே வேகாது.

நம் உரிமைகள் அனைத்தையும் பறித்துக் கொண்டார்கள். இப்போதும் அதற்காக நாம் போராடிக் கொண்டிருக்கிறோம். மாநில உரிமைகளுக்காக போராடிக் கொண்டு இருக்கிறோம். கல்வி உரிமைக்காக போராடிக் கொண்டிருக்கிறோம்.

2வது காரணம் கழக ஆட்சி அமைந்து கடந்த 3½ வருடங்களில் நம் தலைவர் செய்திருக்கிற மக்கள் பணிகள் சாதனைகள்தான் காரணம்.

குறிப்பிட்டு சொல்ல வேண்டுமானால் மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து வசதி. இந்த திட்டத்தின்மூலம் கிட்டத்தட்ட 3½ வருடத்தில் மட்டும் 520 கோடி பயணங்களை மகளிர் மேற்கொண்டு இருக்கிறார்கள். ஒவ்வொரு மகளிரும் மாதந்தோறும் கிட்டத் தட்ட ஆயிரம் ரூபாய் சேமிக் கிறார்கள்.

அடுத்த திட்டம் முதல்அமைச்சரின் காலை உணவு திட்டம் 1ம் வகுப்பு முதல் 5ம் வகுப்பு வரை படிக்க கூடிய 20 லட்சம் குழந்தைகளுக்கு தரமான காலை உணவு வழங்கப்படுவது. இதை மற்ற மாநிலங்களும் இப்போது செயல்படுத்த தொடங்கி இருக்கின்றன. அதே போல் புதுமைப் பெண் திட்டம். தமிழ்ப் புதல்வன் திட்டம். கல்வி உதவித் தொகையாக மாதம் 1000 ரூபாய் வழங்கப்படுகிறது.

இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக கலைஞர் மகளிர் உரிமை தொகை திட்டம். இதை நிறை வேற்றவே முடியாது என்று சொன்னார்கள். ஆனாலும் தலைவர் இதை செயல்படுத்தினார். இப்போது 1 கோடியே 16 லட்சம் மகளிருக்கு மாதம் ரூ.1000 உரிமைத் தொகை வழங்கப்படுகிறது.

சில இடங்களில் குறைகள் இருக்கிறது. எங்களுக்கு வரவில்லை என்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். நான் சுற்றுப்பயணம் செல்லும் போது மகளிர் கேட்கிறார்கள். விரைவில் அதையும் சரி செய்து நம் தலைவர் தகுதியுள்ள அனைத்து மகளிருக்கும் மகளிர் உரிமைத் தொகையை கொடுப்பார்.

3வது காரணம் கழகத் திற்காக உழைத்த உடன்பிறப்புகள். நம் வெற்றிக் கூட்டணி. இது மிக மிக ஒரு நல்ல கூட்டணி.

நம் தலைவர் ஒவ்வொரு தேர்தலிலும் வெற்றி கூட்டணி அமைத்து அந்த கூட்டணியை அரவணைத்து கொண்டு போகிறார். அது தான் மிகப்பெரிய காரணம். கண்டிப்பாக 2026 சட்டமன்ற தேர்தலிலும் தி.மு.க. வெற்றி பெறும். அதற்கு நாம் அனைவரும் மீண்டும் உழைப்பதற்கு தயாராக இருக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

# சென்னை மாநகராட்சியில் சர்ச்சை: கலர் கலராக "லிப்ஸ்டிக்" போட்டதால் மேயரின் டபேதார் அதிரடியாக இடமாற்றம்?



சென்னை, செப். 27

சென்னை மேயர் பிரியாவின் டபேதாராக மாதவி (வயது 50) என்பவர் பணியாற்றி வந்தார். இவர் சென்னை மாநகராட்சியின் முதல் பெண் டபேதார் ஆவார். சென்னை மாநகராட்சி கூட்டம் உள்பட முக்கிய நிகழ்ச்சிகளில் மேயர் பிரியா பங்கேற்கும் போது அவருடன் டபேதார் மாதவி செல்வார். மாதவி உதட்டில் கலர் கலராக "லிப்ஸ்டிக்" பயன்படுத்தும் பழக்கம் கொண்டவர். இதனால் "லிப்ஸ்டிக்" பயன்படுத்தக்கூடாது என்று அவருக்கு அறிவுரை வழங்கப்பட்டது. ஆனாலும் அவர் தொடர்ந்து "லிப்ஸ்டிக்" பூசி வந்துள்ளார்.

கடந்த மாதம் மேயர் பிரியாவின் நிகழ்ச்சியில் பங்கேற்ற டபேதார் மாதவி "லிப்ஸ்டிக்" பயன்படுத்தி உள்ளார். இதனை மேயர் பிரியாவின் உதவியாளர் கண்டித்தார்.

இந்த நிலையில் டபேதார் மாதவி திடீரென்று மணலி மண்டலத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். உரிய நேரத்தில் பணிக்கு வராதது, அலுவலக உத்தரவை பின்பற்றாதது ஆகிய காரணங்களினால் இவர் இடமாற்றம் செய்யப்பட்டு உள்ளதாக கூறப்படுகிறது.

மேலும் பணிக்கு உரிய நேரத்தில் வராதது, மூத்த அதிகாரிகளின் உத்தரவுகளை மதிக்காதது ஆகிய காரணங்களுக்காக மேயரின் கடந்த ஆகஸ்டு 6ந்தேதி மெமோ அனுப்பப்பட்டது.

அந்த மெமோவுக்கு பதிலளித்த மாதவி, ''நான் லிப்ஸ்டிக் அணியக்கூடாது என்று நீங்கள் கூறினீர்கள். ஆனால் நான் லிப்ஸ்டிக் அணிந்தேன். இது குற்றம் என்றால் லிப்ஸ்டிக் அணிய தடை விதித்து அரசு பிறப்பித்த உத்தரவை காட்டுங்கள். சென்னை மாநகராட்சி போன்ற ஒரு அமைப்பில் மனித உரிமைகளை மீறும் வகையிலான இத்தகைய விதிமீறல் கவலையளிக்கிறது'' என கூறி இருந்தார்.

இதற்கு முன்பு டபேதார் மாதவி சென்னை மாநகராட்சி அலுவலகத்தின் ரிப்பன் கட்டிடத்தில் மகளிர் தின விழா நடந்தபோது பேஷன் ஷோவில் பங்கேற்றது விவாதமானது.

இதுபற்றி மேயர் பிரியா கூறுகையில், ''மகளிர் தினத்தின்போது பேஷன் ஷோ ஒன்றில் டபேதார் பங்கேற்றது விமர்சனத்துக்குள்ளானது. அவர் மேட் லிப்ஸ்டிக் அணிந்திருந்தார். லிப்ஸ்டிக் அணிந்திருக்கும்போது அது கவர்ச்சிகரமாக இருந்தது. மேயர் அலுவலகம் என்பது அடிக்கடி அமைச்சர்கள், அதிகாரிகள் வந்து செல்லும் இடம். மேலும் இது போன்ற ஷேடுகளில் லிப்ஸ்டிக் போட வேண்டாம் என்று எனது உதவியாளர் அவரிடம் கூறினார். ஆனால் டபேதார் மாதவியின் இடமாற்றத்துக்கும், இந்த லிப்ஸ்டிக் விவகாரத்துக்கும் சம்பந்தமில்லை'' என்றார்.

இதுகுறித்து டபேதார் மாதவி கண்ணீர் மல்க கூறியதாவது:

என்னை பழிவாங்கும் நோக்கத்தில் பணியிட மாற்றம் செய்துவிட்டனர். நான் வசிக்கும் இடத்தில் இருந்து அருகே உள்ள அண்ணாநகர், அம்பத்தூர், வளசரவாக்கம் உள்ளிட்ட இடங்களுக்கு இடமாற்றம் செய்யாமல் மணலிக்கு மாற்றம் செய்துவிட்டனர்.

எனது மூத்த அதிகாரிகள் கொடுத்த உத்தரவுகளை மீறியதை தவிர, சரியான நேரத்தில் வேலைக்கு வரவில்லை என்பதற்கான ஆதாரத்தை கொடுங்கள்.

கடந்த ஆகஸ்டு 6ந்தேதி வெறும் 30 நிமிடம் தாமதமாக வந்தேன். காலை 10.30 மணிக்கு அலுவலகத்தை அடைந்தேன். காலில் ஏற்பட்ட காயம் காரணமாக தாமதம் ஆனது. மேயரின் உதவியாளர்கள் தொடர்ந்து என் லிப்ஸ்டிக்கை குறைக்க சொன்னார்கள். நான் பளபளப்பான புடவைகளை அணிந்திருப்பதாக அவர்கள் என் மீது குற்றம் சாட்டினார்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

# தொழிலதிபர் குடும்பத்தில் 5 பேர் தற்கொலை காருக்குள் பிணமாக மீட்பு



புதுக்கோட்டை, செப். 27

புதுக்கோட்டை அருகே உள்ள நமுன சமுத்திரம் பகுதியில் நகர சிவ மடம் உள்ளது. இதன் காவலாளியாக அடைக்கலம் என்பவர் உள்ளார்.

இந்த மடத்தில் இறந்தவர்களுக்கு ஒரு சமூகத்தைச் சேர்ந்த உறவினர்கள் இறுதி காரியங்கள் செய்து வருகின்றனர். இங்கு நேற்று மாலை டி.என். 77 எம். 1705 எண் கொண்ட ஒரு கார் வந்தது. அதில் மூன்று பெண்கள் உட்பட 5 பேர் இருந்தனர்.

இவர்கள் நேற்று மாலை அப்பகுதியில் நடமாடியதை சிலர் பார்த்துள்ளனர். பின்னர் வெளியே சென்றுவிட்டுதிரும்பினர். இன்று காலை அந்தக் கார் வெகு நேரமாகியும் அங்கிருந்து புறப்படவில்லை.

இதனால் அக்கம்பக்கத்தினருக்கு சந்தேகம் ஏற்பட்டது. பின்னர் அருகில் சென்று பார்த்தபோது 5 பேரும் பேச்சு மூச்சு இல்லாமல் இருக்கைகளில் சாய்ந்து கிடந்தனர். உடனேகாவலாளிஅடைக்கலம் நமுன சமுத்திரம் போலீசாருக்கு தகவல் கொடுத்தார்.

தகவல் அறிந்த போலீசார் விரைந்து வந்து சம்பவ இடத்தில் விசாரணை நடத்தினர். அப்போது காருக்குள்கிடந்த 5 பேரும் இறந்து கிடந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்தனர்.

தொடர்ந்து போலீசார் நடத்திய விசாரணையில் ஒரேகுடும்பத்தைச்சேர்ந்த 5 பேர் விஷம் குடித்து தற்கொலை செய்தது தெரிய வந்தது. தற்கொலை செய்தவர்கள் சேலம் மாவட்டம் ஆத்தூரை சேர்ந்த தொழிலதிபர் மற்றும் அவரது குடும்பத்தை சார்ந்தவர்கள்.

தற்கொலை செய்த தொழில் அதிபர் புதுக்கோட்டை சிப்காட் பகுதியில் தொழில் செய்து வந்ததாக தெரிகிறது. சேலத்திலும் அவர்கள் தொழில் நடத்தி வந்துள்ளனர். ஆனால் பெயர் விபரங்கள் குறித்து விசாரணை நடத்து வருகிறது.

ஒரு தாய் மகள், தந்தை மகன் மாமியார் உறவு முறையாக இருக்கலாம் என கருதப்படுகிறது. காரில்போலீசார்சோதனை போட்டனர். அப்போது அங்கு ஒரு கடிதம் சிக்கியது. அதில் கடன் தொல்லை காரணமாக 5 பேரும் தற்கொலை செய்வதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

சம்பவ இடத்துக்கு தடயவியல் நிபுணர்கள் வரவழைக்கப்பட்டனர். அவர்கள் தடயங்களை சேகரித்தனர்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர் காருக்குள் விஷம் குடித்து பிணமாக கிடந்த சம்பவம் அந்த பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

# மர்மமான முறையில் இறந்த மாணவி ஸ்ரீமதியின் தாய் மாமன் கைது

சின்னசேலம், செப். 27

கடலூர் மாவட்டம் வேப்பூரை அடுத்த பெரிய நெசலூர் கிராமத்தை சேர்ந்தவர் ராமலிங்கம் மகள் ஸ்ரீமதி (வயது 17). கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்ன சேலம் அருகே உள்ள ஒரு தனியார் பள்ளியில் பிளஸ் 2 படித்து வந்தார்.

இவர் கடந்த 2022ம் ஆண்டு ஜூலை மாதம் 13ந்தே தி மர்மமான முறையில் உயிரிழந்தார். இந்த சம்பவம் தொடா்பாக சி.பி.சி.ஐ.டி. போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனா். மேலும் இந்த வழக்கு கள்ளக்குறிச்சி மாவட்ட தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவா் நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில் நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. ஆனால் நீதிபதி ஸ்ரீராம் விடுமுறையில் இருந்ததால் இந்த வழக்கு விசாரணை அடுத்த மாதம் (அக்டோபர்) 8ந்தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இந்த வழக்கில் ஸ்ரீமதியின் தாய் மாமன் செந்தில் முருகனுக்கு பல முறை சம்மன் அனுப்பியும் ஆஜர் ஆகவில்லை. இதனைத்தொடர்ந்து அவரை கைது செய்ய கோர்ட்டு உத்தரவிட்டது. அதன்படி சென்னையில் தங்கியிருந்த மாணவி ஸ்ரீமதியின் தாய்மாமன் செந்தில் முருகனை போலீசார் கைது செய்தனர். அவரை கள்ளக்குறிச்சி அழைத்து வந்து கோர்ட்டில் ஆஜர்படுத்த உள்ளனர்.

இந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து 5 ஆயிரம் கனஅடியாக அதிகரிப்பு



பென்னாகரம், செப். 27

தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல் காவிரி ஆற்றில் கடந்த ஒரு வாரமாக நீர் வரத்து கடுமையாக சரிந்து வந்தது. நேற்று மாலை வரை 3 ஆயிரம் கன அடி அளவில் மட்டுமே வந்தது.

இந்த நிலையில் நேற்றிரவு கர்நாடகா மற்றும் தமிழக காவிரி நீர் பிடிப்பு பகுதியான அஞ்செட்டி, கேரட்டி, நாட்றாம் பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் மழை பெய்துள்ளது.

இதனால் ஒகேனக்கல்லுக்கு இன்று காலை 8 மணி நிலவரப்படி 5 ஆயிரம் கனஅடியாக நீர்வரத்து அதிகரித்து வந்தது.

மெயின் அருவி, சினி பால்ஸ், ஐவர்பாணி ஆகிய அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டியது. இதனால் சுற்றுலாப் பயணிகள் மெயின் அருவி மற்றும் காவிரி ஆற்றில் குளித்து மகிழ்ந்தனர்.

நீர்வரத்தை பிலிகுண்டுலுவில் மத்திய நீர்வளத் துறையினர் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

# விருதுநகர் சிட்கோ தொழிற்பேட்டையில் `திடீர்' தீ விபத்து



விருதுநகர், செப். 27

விருதுநகர் அழகாபுரி சாலையில் உள்ள சிட்கோ தொழிற் பேட்டையில் சிவ காசியைச் சேர்ந்த பாலாஜி என்பவருக்கு சொந்தமான பாலித்தீன் கவர் பிரிண்டிங் தொழிற்சாலை செயல்பட்டு வருகிறது.

இங்கு 15க்கும் மேற்பட்ட எந்திரங்கள் உள்ளன. சுமார் 20க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை பார்த்து வருகிறார்கள்.

இந்நிலையில் செயல்பாட்டில் இருந்த ஒரு எந்திரத்தில் மின்கசிவு காரணமாக திடீரென தீ விபத்து ஏற்பட்டு பற்றி எரிந்தது. அந்த எந்திரத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்த இரண்டு பேரும், மற்ற தொழிலாளர்களும் தீயை அணைக்க மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியில் முடிந்தது.

இதையடுத்து அவர்கள் அனைவரும் தப்பி வெளியேறினர். பின்னர் விபத்து குறித்து தீயணைப்புத் துறையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

இருப்பினும் அருகில் உள்ள ஆயத்த ஆடை தயாரிக்கும் தொழிற் சாலையைச் சேர்ந்த தொழிலாளர்கள் நிறுவனத்தில் இருந்து பெரிய குழாய்கள் மூலம் தண்ணீரை கொண்டு வந்து தீயை அணைத்தனர்.

விரைந்து வந்த தீயணைப்பு துறையினர் தீ மேலும் பரவாமல் தடுத்து அணைத்தனர். இந்த விபத்தில் பிரிண்டிங் எந்திரம், பாலித்தீன் கவர் ரோல்கள் மற்றும் பிரிண்டிங் மைகேன்கள், உபகரணங்கள் உள்ளிட்ட பல லட்சம் மதிப்பிலான பொருட்கள் எரிந்து சேதமாகின.

இந்த தீ விபத்து குறித்து விருதுநகர் பஜார் காவல் நிலைய போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# நிதி நெருக்கடியால் ஆசிரியர் நியமனங்கள் நிறுத்தமா? அன்புமணி ராமதாஸ் கண்டனம்



சென்னை, செப். 27

பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

தமிழ்நாடு அரசு கடுமையான நிதி நெருக்கடியில் சிக்கித் தவிப்பதால் இடைநிலை ஆசிரியர்கள் தொடங்கி கல்லூரிகளுக்கான உதவிப் பேராசிரியர்கள் வரை அனைத்து நிலை ஆசிரியர் நியமனங்களும் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாக தந்தி தொலைக்காட்சி செய்தி வெளியிட்டிருக்கிறது. இந்த செய்தி உண்மையாக இருந்தால் தமிழக அரசின் முடிவு கடுமையாக கண்டிக்கத்தக்கது.

தமிழ்நாட்டில் ஆசிரியர்களை நியமிப்பதில் செய்யப்படும் காலதாமதத்தையும், அலட்சியத்தையும் வைத்துப் பார்க்கும்போது இந்த செய்திகள் உண்மை தானோ? என்று எண்ணத் தோன்றுகிறது. தமிழ்நாட்டில் கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக இடைநிலை மற்றும் பட்டதாரி ஆசிரியர்கள் ஒருவர் கூட நியமிக்கப்படவில்லை. நீண்ட இடைவெளிக்குப் பிறகு கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் அறிவிக்கப்பட்டு, நடப்பாண்டின் தொடக்கத்தில் போட்டித் தேர்வுகள் நடத்தப்பட்ட பட்டதாரி ஆசிரியர் பணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் பட்டியல் கடந்த மாதமே வெளியிடப்பட்ட பிறகும் அவர்களுக்கு பணியமர்த்தல் ஆணைகள் இன்னும் வழங்கப்படவில்லை.

அரசு பள்ளிகளுக்கு 2768 இடைநிலை ஆசிரியர்களை தேர்ந்தெடுப்பதற்கான அறிவிப்பு கடந்த பிப்ரவரி மாதம் வெளியிடப்பட்டு, ஜூலை 21ஆம் நாள் போட்டித்தேர்வுகள் நடத்தப்பட்ட நிலையில், அத்தேர்வுக்கான விடைக் குறிப்புகள் கூட இன்னும் வெளியிடப்படவில்லை. அரசு கல்லூரிகளுக்கு 4000 உதவிப் பேராசிரியர்களை நியமிப்பதற்கான அறிவிக்கை கடந்த மார்ச் 14 ஆம் தேதி வெளியிடப்பட்டு ஆகஸ்ட் 4ஆம் தேதி நடத்தப்படவிருந்த போட்டித்தேர்வுகள் ஒத்திவைக்கப்பட்டு விட்டன. அந்தத் தேர்வுகள் எப்போது நடத்தப்படும் என்பது குறித்து ஆசிரியர் தேர்வு வாரியம் தரப்பில் எந்த செய்தியும் இல்லை.

கடந்த மே மாதம் வெளியாவதாக இருந்த முதுநிலை பட்டதாரி ஆசிரியர்கள் நியமனத்திற்கான அறிவிக்கையும், கடந்த ஏப்ரல் மாதம் வெளியாவதாக இருந்த ஆசிரியர் தகுதித் தேர்வுக்கான அறிவிக்கையும் செப்டம்பர் மாதம் முடிவடையப் போகும் நிலையிலும் வெளியாகவில்லை. அதேபோல், தமிழ்நாட்டில் 13 ஆயிரத்திற்கும் கூடுதலான ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இருக்கும் நிலையில், குறைந்த எண்ணிக்கையிலான பணியிடங்களை மட்டுமே நிரப்பப்போவதாகவும், மீதமுள்ள பணியிடங்களை நிரப்ப நிதியமைச்சகம் ஒப்புதல் அளிக்கவில்லை என்றும் பள்ளிக் கல்வித்துறை தரப்பில் அளிக்கப்பட்டுள்ள தகவல்கள் நிதிநெருக்கடி ஐயத்தை உறுதி செய்கின்றன.

ஒரு மாநிலத்தின் வளர்ச்சிக்கான முதன்மைத் தேவை கல்வி தான். தமிழ்நாட்டில் கல்வித்துறைக்கு மாநிலத்தின் ஒட்டு மொத்த உற்பத்தி மதிப்பில் (ஜி.எஸ்.டி.பி) 6 % செலவிட வேண்டியுள்ள நிலையில், ஒன்றரை விழுக்காட்டுக்கும் குறைவான தொகை தான் செலவிடப்படுகிறது. இந்த நிலை மாற்றப்பட வேண்டும். பள்ளிக்கல்வித்துறைக்காக ஆண்டுக்கு குறைந்தது ஒரு லட்சம் கோடி ரூபாயாவது ஒதுக்கப்பட வேண்டும். இதுவும் கூட மாநிலத்தின் ஒட்டுமொத்த உற்பத்தி மதிப்பில் சுமார் 3% என்ற அளவில் தான் இருக்கும். முதற்கட்டமாக இந்த அளவு நிதியை ஒதுக்கீடு செய்து விட்டு, படிப்படியாக இதை அதிகரிக்க வேண்டும். காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்கள் அனைத்தையும் மார்ச் மாதத்திற்குள் நிரப்பவும் தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

# மேட்டூர் அணை நீர்மட்டம் 99 அடியாக குறைந்தது

சேலம், செப். 27

காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கடந்த ஜூலை மாதம் தொடக்கத்தில் பெய்த கனமழை காரணமாக நீர்வரத்து அதிகரித்து காணப்பட்டது. இதன் காரணமாக மேட்டூர் அணை நிரம்பியது. இதையடுத்து ஜூலை மாதம் 28ந்தேதியில் இருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கும், அதனை தொடர்ந்து கிழக்கு, மேற்கு கால்வாய் பாசனத்துக்கும் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது.

பாசன தேவைக்கு ஏற்ப மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் அதிகரித்தும், குறைத்தும் திறந்து விடப்பட்டு வருகிறது. இதற்கிடையே கடந்த 15 நாட்களுக்கும் மேலாக நீர்ப்பிடிப்பு பகுதிகளில் போதிய மழை இல்லாததால் அணைக்கு நீர்வரத்து குறைந்து காணப்படுகிறது. அணைக்கு வரும் தண்ணீரை விட அதிகளவில் பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டு வருவதால் மேட்டூர் அணையின் நீர்மட்டமும் கிடுகிடுவென குறைந்து வருகிறது.

இந்த ஆண்டில் அணை 2முறை நிரம்பினாலும், பாசனத்துக்குதண்ணீர்திறக்கப்பட்டுவருவதால்நீர்மட்டமும் தொடர்ந்து குறைந்து வருகிறது.

இன்று காலை நிலவரப்படி மேட்டூர் அணையின் நீர்மட்டம் 99.79 அடியாக குறைந்தது. அணைக்கு வினாடிக்கு 1537 கனஅடி தண்ணீர் வந்து கொண்டு இருக்கிறது. அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு வினாடிக்கு 15 ஆயிரம் கனஅடியும், கிழக்கு, மேற்கு கால்வாய் பாசனத்துக்கு வினாடிக்கு 700 கனஅடி தண்ணீரும் திறக்கப்பட்டு வருகிறது. தொடர்ந்து பாசனத்துக்கு அதிகளவில் தண்ணீர் திறக்கப்பட்டு வருவதால் மேட்டூர் அணையின் நீர்மட்டம் 60 நாட்களுக்கு பிறகு 100 அடிக்கு கீழ் குறைந்து உள்ளது குறிப்பிடத்தக்கது. தற்போது அணையில் 64.56 டி.எம்.சி.தண்ணீர் இருப்பு உள்ளது.

# சென்னையில் 19 பெண் போலீசுக்கு வெளி மாவட்டங்களுக்கு இடமாறுதல் கமிஷனர் உத்தரவு



சென்னை, செப். 27

சென்னை போலீஸ் கமிஷனர் அலுவலகம் சார்பில் வெளியிடப்பட்டுள்ள செய்தி குறிப்பில் கூறி இருப்பதாவது:

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காவல்துறையில் பணிபுரியும் பெண் காவலர்கள் மற்றும் பெண் காவல் அதிகாரிகள் ஒரு ஆண்டு மகப்பேறுவிடுமுறைமுடிந்து, பணிக்குதிரும்பும் போது அவர்களின் குழந்தைகளை பராமரிப்பதற்கு வசதியாக, அவர்கள் மகப்பேறு விடுமுறையில் இருந்து பணிக்குத் திரும்பிய பிறகு அவர்களுடைய பெற்றோர்களோ அல்லது கணவர் வீட்டைச் சேர்ந்தவர்களோ வசிக்கும் மாவட்டங்களுக்கு அடுத்த 3 ஆண்டுகளுக்கு பணிமாறுதல் வழங்கப்படும் என ஆணை பிறப்பித்துள்ளார்.

அவரது ஆணைக்கிணங்க அரசு உத்தரவினை நிறைவேற்றும் வகையில் சென்னை பெருநகர காவல்துறையில் பணிபுரியும் 19 பெண் காவலர்கள் அவர்களது விருப்பப்படி சென்னை பெருநகர காவலில் இருந்து பல்வேறு மாவட்டங்களுக்கும் பணிமாறுதல் ஆணையினை பெற்று சென்றுள்ளனர்.

சென்னை போலீஸ் கமிஷனர் அருண், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின ஆணையினை செயல்படுத்தி உள்ளார்.

# பாஜக சார்பில் பண்டிட் தீன் உபாத்யாயா பிறந்த நாள் விழா கொண்டாட்டம்



விழுப்புரம், செப் 27


விழுப்புரம் மாவட்டம் கண்டாச்சிபுரம் வட்டம் மணம்பூண்டியில் பாரதிய ஜனதா கட்சியை உருவாக்கிய பண்டிட் தீன்தயாள்உபாத்யாயா அவர்கள் பிறந்தநாளை முன்னிட்டு திருக்கோவிலூர்சட்டமன்றம் முகையூர் ஒன்றியம் இணைந்து அவரது திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி கட்சி கொடி ஏற்றப்பட்டு உறுப்பினர்கள் அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டது. மேலும் ஊரக வளர்ச்சி அலுவலகத்தை சுத்தப்படுத்தி தேசிய தலைவர் மகாத்மா காந்தி அவர்கள் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

# மங்கலத்தில் விற்பனைக்காக வைத்திருந்த 1.200 கிலோ கஞ்சா பறிமுதல்; ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்த 3 பேர் கைது

மங்கலம்,செப்.27

திருப்பூர் மாவட்டம் மங்கலத்தை அடுத்த புக்கிளிபாளையம் பஸ் நிறுத்தம் பகுதியில் 3 பேர் கஞ்சா வைத்துக் கொண்டுநின்றிருப்பதாக மங்கலம் போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதைத்தொடர்ந்து மங்கலம் போலீசார் புக்கிளிபாளையம் பஸ் நிறுத்தம் பகுதியில் சந்தேகப்படும்படி நின்று கொண்டிருந்த வட மாநில வாலிபர்களை பிடித்து போலீசார் விசாரணை செய்தனர். அப்போது அவர்களிடம் 1.200 கிலோ கஞ்சா இருந்தது. பின்னர் 3 பேரையும் கைது செய்தனர். விசாரணையில் கைதான 3 பேரும் ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்த பிரகாஷ்மஜி(25), உமாகந்தா பாரிக்(37), துகிராம் பாரிக்(41) என தெரியவந்தது. 3 பேரை கைது செய்த மங்கலம் போலீசார் திருப்பூர் சிறையில் அடைத்தனர்.

# ஆன்மீகத்தில் பெண்கள் வளர்வதற்கான நேரம் இது: சத்குரு ஜக்கி வாசுதேவ்



சென்னை, செப்.27

ஈஷா யோக மையத்தில் ஆண்டுதோறும் செப்டம்பர்23ம்தேதியை சத்குரு அவர்களின் ஞான தோய தினமாக கொண்டாடுவது வழக்கம். அந்த வகையில் இந்த ஆண்டுக்கான கொண்டாட்டம் அமெரிக்காவில் உள்ள ஈஷாயோகமையத்தில் நடத்தப்பட்டது. இதில் சத்குரு ஜக்கி வாசுதேவ் நேரலையில் பங்கேற்று பேசினார்.

அப்போது அவர் பேசியதாவது: ஞானோதயம் என்றால் தலையில் கொம்பு, முதுகில் சிறகு என கண்ணுக்கு தெரியும் மாற்றங்களோடு இருப்பதல்ல. இது உயிரின் செயல்முறையை புரிந்து கொள்வது. தலைமுறைகளின் நீட்சியாக மட்டுமே இல்லாமல், தனித்துவம் மிக்க தனிமனிதராக நீங்கள் உயர வேண்டும். தனிமனிதராக இருப்பது என்றால் அனைத்திலும் உங்களை காணும் தன்மையோடு இருக்க வேண்டும்.

நான் வேறு மற்றவை வேறு என்ற பாகுபாடு இல்லாமல் அனைத்துமே நாம் தான் என்கிற தன்மையோடு இருக்க வேண்டும். மேலும் ஞானமடைதல் என்பது நீங்கள் எந்தளவு தீவிரமாக இருக்கிறீர்கள் என்பதை பொருத்தது. தேவையான தீவிரத்தோடு நீங்கள் இருந்தால். இது உங்களுக்கு நிகழும். பலதலைமுறைகள் முன்பு உலகில் ஆயிரக்கணக்கான பெண்கள் ஆன்மீகத்தில் உயர்ந்தவர்களாக இருந்தார்கள்.

அதேபோல் இது பெண்கள் ஆன்மீகத்தில் வளர்வதற்கான நேரம். பெண்கள் ஆண்களோடு போட்டி போடுகிறோம் என்கின்றனர். குறிப்பாக உடல் வலிமை சார்ந்த போட்டிகளாக அவை இருக்கின்றது. உடலளவில் ஆண் தன்மை வேறு பெண் தன்மை வேறு. ஆனால் ஆன்மீகத்தில் அப்படியொரு பாகுபாடு இல்லை. எனவே இது தான் பெண்கள் போட்டியிடவும், வளரவும் அவர்களின் முழுமையான திறனை வெளி ப்படுத்தவும் ஏற்ற இடம்.

தற்போது ஆன்மீகத்தில் பெண்கள் வளர்வதை யாராலும் தடுக்க முடியாது. இன்றைய காலகட்டத்தில், ஆன்மீக விழிப்புணர்வோடு வளரும் முதல் தலைமுறை பெண்கள் என்கிற பெருமையையும் அதற்கான அங்கீகாரத்தையும் பெறுவார்கள்.

கான்சியஸ் ப்ளானட் எனும் அமைப்பின் ஓர் அங்கமாக அமெரிக்காவில் பிரதிஷ்டை செய்யப்பட்ட நகரம் ஒன்று உருவாகி வருகிறது. இந் நகரம் அடுத்த 3040 ஆண்டுகளில் உலகின் மிக முக்கியமான இடமாக திகழும். இவ்வாறு அவர் கூறினார்.

# உறுப்பினர் சேர்க்கை: இன்று வரை எச்.ராஜா தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம்



சென்னை, செப். 27

பா.ஜ.க.வில் உறுப்பினர் சேர்க்கை பணிகளை ஆய்வு செய்வதற்காக தமிழக பா.ஜ.க. ஒருங்கிணைப்புக்குழு தலைவர் எச்.ராஜா மாவட்டம் வாரியாக தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளார்.

இதுகுறித்து தமிழக பா.ஜ.க. தலைமை அலுவலக செயலாளர் எம்.சந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறிஇருப்பதா வது: தமிழக பா.ஜ.க. ஒருங்கிணைப்புக்குழு தலைவர் எச்.ராஜா, தமிழகம் முழுவதும் பா.ஜ.க.வின் அமைப்புரீதியான 65 மாவட்டங்களுக்கும் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். அதன்படி அவரது சுற்றுப்பயணம் செங்கல்பட்டில் நேற்று தொடங்கியது. அவர் தென் சென்னை, சென்னை கிழக்கு,மத்தியசென்னை கிழக்கு ஆகிய மாவட்டங்களில் ஆய்வு பணிகளை மேற்கொள்கிறார். நாளை (26ந்தேதி) காஞ்சீபுரம், திருவள்ளூர் கிழக்கு, திருவள்ளூர் மேற்கு,சென்னைமேற்கு ஆகிய மாவட்டங்களில் ஆய்வு மேற்கொள்கிறார்.

இன்று 27ந்தேதி மத்திய சென்னை மேற்கு, வட சென்னை கிழக்கு, வட சென்னை மேற்கு ஆகிய மாவட்டங்களில் ஆய்வு செய்கிறார்.

அதைத்தொடர்ந்து அவர் திருச்சி, மதுரை, தூத்துக்குடி, கன்னியாகுமரி, தென்காசி, தஞ்சாவூர், திருநெல்வேலி, கடலூர், விழுப்புரம், வேலூர், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம், ஈரோடு, திருப்பூர், கோவை உள்ளிட்ட தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து ஆய்வு பணிகளில் ஈடுபடுகிறார். அக்டோபர் 17ந்தேதி நீலகிரியில் அவர் தனது சுற்றுப்பயணத்தை நிறைவு செய்கிறார். இந்த சுற்றுப்பயணத்தின் ஒருங்கிணைப்பாளராக கட்சியின் விளையாட்டு மற்றும் திறன் மேம்பாட்டு பிரிவின் மாநிலத் தலைவர் அமர் பிரசாத் ரெட்டி நியமிக்கப்பட்டுள்ளார். இவ்வாறு அதில் கூறப்பட்டு ள்ளது.



# கவுன் பனேகா குரோர்பதி 16 : ரூ.1 கோடி வென்ற 22 வயது வாலிபர்

நடிகர் அமிதாப் பச்சன், இந்தி சேனல் ஒன்றில், 'கோன் பனேகா குரோர்பதி' நிகழ்ச்சியின் 16வது சீசன் இப்போது நடத்தி வருகிறார். இந்நிகழ்ச்சி பல்வேறு எபிசோடுகளை கடந்து நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், இந்நிகழ்ச்சியின் முதல் கோடீஸ்வரரானார் 22 வயதான வாலிபர் ஒருவர்.

ஜம்மு காஷ்மீரை சேர்ந்த 22 வயதான யுபிஎஸ்சி ஆர்வலரான சந்தர் பிரகாஷ் என்பவர் தான் க்ரோர்பதி 16 நிகழ்ச்சியில் கோடீஸ்வரரான முதல் போட்டியாளர் ஆவார்.

"எந்த நாட்டின் மிகப்பெரிய நகரம் அதன் தலைநகரம் அல்ல, ஆனால் அமைதியின் இருப்பிடம் என்று பொருள்படும் அரபுப் பெயரைக் கொண்ட துறைமுகம் எது?" என்ற ரூ.1 கோடி கேள்விக்கு சரியான பதிலை அளித்தார். அதற்கு சரியான பதில் தான்சானியா.

# காம்தார் சாலைக்கு எஸ்.பி.பாலசுப்பிரமணியம் பெயர்: முதலமைச்சருக்கு எஸ்.பி.பி.சரண் நன்றி



தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் மற்றும் இந்தி என பல்வேறு மொழி திரைப்படங்களில் 40 ஆயிரம் பாடலுக்கு மேல் பாடி மத்திய, மாநில அரசு விருதுகள் உள்பட ஏராளமான விருதுகளை பெற்றவர் பிரபல பாடகர் மறைந்த எஸ்.பி.பாலசுப்பிரமணியம்.

இவர் கொரோனா தொற்று காரணமாக கடந்த 2020ம் ஆண்டு செப்டம்பர் 25ந் தேதி மரணம் அடைந்தார்.

அவரது 4வது நினைவு தினம் நேற்று அனுசரிக்கப்பட்ட நிலையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், எஸ்.பி.பாலசுப்பிரமணியம் திரையுலகிற்கு ஆற்றிய சேவையைப் போற்றும் வகையிலும், சிறப்பு சேர்க்கும் வகையிலும், அவர் வாழ்ந்த இல்லம் அமைந்துள்ள நுங்கம்பாக்கம் காம்தார் நகர் மெயின் ரோட்டிற்கு 'எஸ்.பி.பாலசுப்பிரமணியம் சாலை" என பெயரிடப்படும் என்று அறிவித்தார்.

இந்த நிலையில் எஸ்.பி.பாலசுப்பிரமணியனின் மகன் எஸ்.பி.பி. சரண் சமூக வலைதளத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கும், உதயநிதி ஸ்டாலினுக்கும் அவரது குடும்பத்தினர் சார்பாக நன்றி தெரிவித்துள்ளார்.

# சிட்டாடல் வெப் தொடர்: பிரியங்கா சோப்ராவுடன் சமந்தா சந்திப்பு வைரலாகும் புகைப்படம்



தமிழ், தெலுங்கு திரையுலகில் முன்னணி கதாநாயகியாக வலம் வந்த சமந்தா விவாகரத்து, மயோசிடிஸ் நோய் பாதிப்பு போன்ற பிரச்சினைகளால் சில காலம் சினிமாவை விட்டு ஒதுங்கி இருந்து விட்டு இப்போது மீண்டும் பிஸியாக நடிக்க தொடங்கி உள்ளார். ஹாலிவுட் வெப் தொடரான சிட்டாடல் தொடரில் பிரியங்கா சோப்ரா, ரிச்சர்ட் மேடன் ஆகியோர் நடித்துள்ளனர். இந்த தொடரின் இந்தி பதிப்பில் சமந்தா, வருண்தவான் நடித்து இருக்கிறார்கள். ராஜ் அண்ட் டிகே இயக்கி உள்ளனர்.

சிட்டாடல் தொடர் விரைவில் ஓ.டி.டி.யில் வெளியாக இருக்கும் நிலையில் லண்டனில் இந்த தொடரின் சிறப்பு காட்சி திரையிடும் நிகழ்ச்சி நடந்தது. இதில் பிரியங்கா சோப்ரா, சமந்தா ஆகியோர் பங்கேற்று ஒருவரையொருவர் சந்தித்து நலம் விசாரித்துக்கொண்டனர். அப்போது இருவரும் போட்டோவுக்கு போஸ் கொடுத்த புகைப்படம் வலைத்தளத்தில் வெளியாகி வைரலாகி வருகிறது.

# டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு அறிவித்த ஷகிப் அல் ஹசன்



வங்கதேச அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் மற்றும் 3 போட்டிகள் கொண்ட டி20 தொடர்களில் விளையாடி வருகிறது. இதில் இரு அணிகளுக்கும் இடையேயான முதலாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 280 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரில் 10 என்ற கணக்கில் முன்னிலை வகித்து வருகிறது.

இதனையடுத்து இவ்விரு அணிகளுக்கும் இடையேயான இரண்டாவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டியானது கான்பூரில் உள்ள க்ரீன் பார்க் மைதானத்தில் நாளை நடைபெறவுள்ளது. இப்போட்டிக்காக இரு அணி வீரர்களும் தீவிரமாக தயாராகி வருகின்றனர்.

இந்நிலையில் இந்த தொடரில் வங்கதேச அணியில் இடம்பிடித்து விளையாடி வரும் சீனியர் சுழற்பந்து வீச்சாளர் ஷகிப் அல் ஹசன் டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

அடுத்த மாதம் வங்கதேசத்தில் நடைபெறும் தென் ஆப்பிரிக்காவுக்கு எதிரான தொடருடன் அவர் ஓய்வு பெறுவதாக வங்கதேச கிரிக்கெட் வாரியம் தெரிவித்துள்ளது.

# 2வது டெஸ்ட் நாளை தொடக்கம்: வங்கதேசதுக்கு எதிராக 3 சுழற்பந்து வீச்சாளர்களுடன் களமிறங்கும் இந்தியா?

வங்காளதேச கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகள் இடையேயான 2 டெஸ்ட் தொடரில் சென்னையில் நடந்த முதல் போட்டியில் இந்திய அணி 280 ரன் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இதன் மூலம் இந்தியா 10 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

இந்தியாவங்காளதேசம் அணிகள் மோதும் 2வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி உத்தரப்பிரதேச மாநிலம் கான்பூர் கிரீன் பார்க் மைதானத்தில் நாளை (வெள்ளிக்கிழமை) தொடங்குகிறது.

ரோகித் சர்மா தலைமையிலான இந்திய அணி இந்த டெஸ்டிலும் வெற்றி பெற்று தொடரை 20 என்ற கணக்கில் கைப்பற்றும் ஆர்வத்தில் இருக்கிறது . டிரா செய்தாலே தொடரை வென்றுவிடும்.

இந்திய அணி தொடர்ச்சியாக சொந்த மண்ணில் 17 டெஸ்ட் தொடரை கைப்பற்றி முத்திரை பதித்துள்ளது. வங்காளதேசத்துக்கு எதிராகவும் வெல்லும் போது தொடர்ந்து 18வது டெஸ்ட் தொடராக அமையும்.

கான்பூர் ஆடுகளம் சுழற்பந்து வீச்சுக்கு ஏற்றதாக இருக்கும். இதனால் 3வது சுழற்பந்து வீரராக அக்ஷர் படேல் அல்லது குல்தீப் யாதவ் தேர்வு செய்யப்படுவார்கள். ஆகாஷ் தீப் நீக்கப்படுவார். மற்றபடி அணியில் மாற்றம் இருக்காது.

கிட்டத்தட்ட 2 ஆண்டுகளுக்கு பிறகு டெஸ்டில் ஆடிய ரிஷப் பண்ட் சேப்பாக்கத்தில் சதம் அடித்து சாதித்தார். இதே போல சுப்மன்கில்லும் செஞ்சூரி அடித்தார். தொடக்க வீரர் ஜெய்ஷ்வாலும் நல்ல நிலையில் உள்ளார்.

சென்னையை சேர்ந்த ஆர்.அஸ்வின் முதல் டெஸ்டில் சதம் அடித்ததோடு 6 விக்கெட் வீழ்த்தி வெற்றிக்கு முக்கிய பங்கு வகித்தார். இதேபோல ஜடேஜாவும் ஆல்ரவுண்டர் பணியில் சிறப்பாக செயல்பட்டார். வேகப்பந்து வீச்சில் ஜஸ்பிரித் பும்ரா அணியின் முதுகெலும்பாக உள்ளார். கேப்டன் ரோகித் சர்மா, வீராட் கோலியும் தங்களது பேட்டிங் திறனை வெளிப்படுத்த வேண்டிய நிலையில் உள்ளனர்.

டெஸ்ட் தொடரை இழக்காமல் இருக்க இந்த டெஸ்டில் வெல்ல வேண்டிய நெருக்கடி நஜூமுல் ஹூசைன் ஷான்டே தலைமையிலான வங்காளதேச அணிக்கு இருக்கிறது. பாகிஸ்தானை அதன் சொந்த மண்ணில் 2 டெஸ்டிலும் வீழ்த்திய வரலாறு படைத்த வங்காள தேசத்தால் இந்தியாவில் சாதிக்க முடியவில்லை. அந்த அணி இந்தியாவுக்கு பதிலடி கொடுக்க கடுமையாக போராடும்.

காயத்தில் இருக்கும் ஆல் ரவுண்டர் ஷகீப்அல்ஹசன் 2வது டெஸ்டில் ஆடுவாரா? என்பது உறுதியில்லை. அந்த அணியில் முஷ்பிகுர் ரகீம், கேப்டன் ஹான்டோ, லிட்டன் தாஸ், மெகதிஹசன் மிராஸ், தஜிஜூல் இஸ்லாம் போன்ற சிறந்த வீரர்கள் உள்ளனர்.

இரு அணிகளும் நாளை மோதுவது 15வது டெஸ்டாகும். இதுவரை நடந்த 14 போட்டியில் இந்தியா 12ல் வெற்றி பெற்றது. 2 டெஸ்ட் டிரா ஆனது.

இரு அணிகள் இடையே நடந்த 8 டெஸ்ட் தொடரில் இந்தியா 7 தொடரைகைப்பற்றியுள்ளது. 2015ம் ஆண்டு நடந்த ஒரே ஒரு டெஸ்ட் தொடர் டிரா ஆனது.

காலை 9.30மணிக்கு தொடங்கும் இந்த டெஸ்ட் போட்டி ஸ்போர்ட்ஸ் 18 மற்றும் ஜியோ சினிமாவில் நேரடியாக ஒளிபரப்பு செய்யப்படுகிறது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.